الأدعية المسنونة

அண்ணலாரின் அழகிய துஆக்கள்

துஆக்களின் பொக்கிஷம்



பொருளடக்கம்

ஆசிரியர் :
மௌலவி, அப்ஸலுல் உலமா, அல்ஹாஜ்
M.அப்துர் ரஹ்மான் பாஜில் பாகவி M.A.

துஆவின் சிறப்புகள்

துஆவின் சிறப்புகளைப் பற்றி அருள்மறை திருக்குர்ஆன் அழகாக எடுத்துரைக்கிறது. அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَإِذَا سَأَلَكَ عِبَادِي عَنِّي فَإِنِّي قَرِيبٌ أُجِيبُ دَعْوَةَ الدَّاعِ إِذَا
دَعَانِ فَلْيَسْتَجِيبُوا لِي وَلْيُؤْمِنُوا بِي لَعَلَّهُمْ يَرْشُدُونَ

பொருள் : மேலும் (நபியே!) என்னுடைய அடியார்கள் என்னைப் பற்றி உம்மிடம் கேட்டால் (அதற்கு நீர் கூறுவீராக) ''நிச்சயமாக நான் (அவர்களுக்கு) மிகச் சமீபமாகவே இருக்கின்றேன்; அழைப்பவரின் அழைப்புக்கு அவர் என்னை அழைத்தால் நான் பதிலளிப்பேன். ஆகவே அவர்கள் நேரான வழியை அடைவதற்காக அவர்கள் எனக்குப் பதிலளிக்கட்டும். அவர்கள் என்னையே ஈமான் கொள்ளட்டும்.

(அல்குர்ஆன் 2-186)

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَقَالَ رَبُّكُمُ ادْعُونِي أَسْتَجِبْ لَكُمْ

பொருள் : உங்களுடைய இரட்சகன் கூறுகிறான். நீங்கள் என்னையே அழைத்துப் பிரார்த்தியுங்கள். நான் உங்களுடைய பிரார்த்தனைக்கு பதிலளிப்பேன்.

(அல்குர்ஆன் 40-60)

பொருளடக்கம்

துஆவின் சிறப்பை பற்றி அண்ணல் நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்கள் ஏராளமாக உள்ளன. ஒரு ஹதீஸில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.

"துஆ, அது தான் இறை வணக்கமாகும்".

(அபூதாவூது, திர்மிதி)

மற்றொரு மணிமொழியில் "துஆ, இறை வணக்கத்தின் மூளையாகும் (அசலாகும்)" எனப் பகர்ந்துள்ளார்கள். (திர்மிதி)

துஆ, இறை வணக்கங்களுக்கு எல்லாம் அடிப்படையாக விளங்குகிறது என்பதை இந்த ஹதீஸ்கள் எடுத்துரைக்கின்றன. ஆகவே வணக்கங்களுக்கு அடிப்படையாக விளங்கும் துஆவை நாம் அதிகமாகக் கேட்டு வர வேண்டும்.

துஆவின் சிறப்பைப் பற்றி மற்றொரு ஹதீஸில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நிச்சயமாக உங்கள் இரட்சகன் அவன் பாக்கியம் பெற்றுவிட்டான். அவன் உயர்ந்துவிட்டான். அவன் அதிக வெட்கமுள்ளவன். அதிக தயாளமானவன். அவனின் அடியான் அவனின் இரு கரங்களையும் அவனளவில் உயர்த்தி (துஆக் கேட்டு) விட்டால் அவ்விரு கரங்களையும் காலியாக (வெறுமனே) அனுப்புவதற்கு அவன் வெட்கமடைகிறான். (அபூதாவூது)

பொருளடக்கம்

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பகர்ந்தார்கள்: பாவம் மற்றும் உறவைத் துண்டிப்பது ஆகியவை இல்லாத (நன்மையான) துஆவை அல்லாஹு தஆலாவிடம் செய்யும் எந்தவொரு முஸ்லிமுக்கும் மூன்று விஷயங்களில் ஒன்றை அல்லாஹு தஆலா தந்தே தவிர வேறில்லை.

1) ஒன்று அவரின் துஆவை விரைந்து அல்லாஹ் ஏற்றுக்கொள்வான்.

2) அல்லது அதன் நன்மையை அவருக்கு மறுமையில் சேமித்து விடுவான்.

3) அல்லது அது போன்ற அளவு, அவருக்கு ஏற்படவிருந்த தீங்கை அல்லாஹ் தடுத்து விடுவான் (அந்த சோதனையை விட்டு ஈடேற்றத்தைக் கொடுப்பான்.)

அப்பொழுது தோழர்கள், அப்படியானால் நாங்கள் அதிகமாக துஆக் கேட்போம் எனக் கூறினார்கள். அதற்கு அண்ணலார், அல்லாஹ்வும் அதிகமாக வழங்குவான் எனப் பகர்ந்தார்கள்.

(திர்மிதி, அஹ்மது, ஸஹீஹுல் ஜாமிவு)

வாழ்வின் அனைத்துத் தேவைகளுக்கும் துஆ அவசியம்

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தங்களின் அனைத்து விஷயங்களிலும் அல்லாஹு தஆலாவிடம் துஆச் செய்வார்கள். அக்காரியம் சிறிய

பொருளடக்கம்

விஷயமாக இருந்தாலும் சரி. பெரிய விஷயமாக இருந்த போதினும் சரியே!

வரலாற்றுச் சிறப்பு மிகுந்த தாயிஃப் பயணம், ஹிஜ்ரத் பயணம், பத்ருப் போர், உஹதுப் போர், கன்தக் - அகழ்ப்போர் போன்ற மிக முக்கியமான, மிக நெருக்கடியான கட்டங்களிலும் அவர்கள் அல்லாஹுதஆலாவிடம் துஆச் செய்தார்கள். திருமணம் வியாபாரம், குழந்தை பாக்கியம், வெற்றிச் செய்திகள் போன்ற மகிழ்ச்சியான நேரங்களிலும் அல்லாஹ்விடம் துஆச் செய்தார்கள். மேலும் நோய் நொடி, மரணம், போரில் தோல்வி, இழப்புகள் கடுமையான சோதனையின் கட்டங்கள் ஆகிய கவலையான நேரங்களிலும் அல்லாஹுதஆலாவிடம் துஆச் செய்தார்கள். அதே நேரம் தங்களின் சிறு சிறு தேவைகளிலும் தங்களின் தோழர்களின் சிறு சிறு தேவைகளிலும் அலலாஹ்விடம் துஆச் செய்துள்ளார்கள். ஹதீஸில் வருகிறது.

ஹஜ்ரத் அனஸ் (ரலி) அறிவிக்கிறார்கள்: அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். "உங்களில் ஒருவர் தம் ரப்பிடம் தம் தேவைகள் அனைத்தையும் கேட்கட்டும். எதுவரையெனில் அவரின் செருப்பின் வார் அறுந்துவிட்டாலும் அதனையும் தம் ரப்பிடம் கேட்கட்டும்".

(திர்மிதி)

பொருளடக்கம்

ஆகவே நாம் நம் அனைத்துத் தேவைகளுக்கும், அனைத்து விஷயங்களுக்கும் நம் ரப்பிடம் துஆக் கேட்டு வருவோமாக!

துஆவின் வாசல்

துஆவின் வாசல் உங்களில் எவருக்கு திறக்கப்படுகிறதோ, அவருக்கு அல்லாஹ்வின் ரஹ்மத்தின் (கிருபையின்) வாசல்கள் திறக்கப்படுகின்றன என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக நபித்தோழர் ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அறிவிக்கிறார்கள். (திர்மிதி)

சோதனைகளைத் தடுக்கும் கேடயம் துஆ

நிச்சயமாக துஆ இதற்கு முன் இறங்கிவிட்ட சோதனைகளையும், இனிமேல் இறங்கப் போகும் சோதனைகளையும் தடுத்து உங்களுக்குப் பயன் தரும். ஆகவே அல்லாஹ்வின் அடியார்களே! துஆக் கேட்பதைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள் என மாநபி (ஸல்) அவர்கள் ஒரு மணிமொழியில் பகர்ந்துள்ளார்கள். (திர்மிதி)

செழிப்பான காலங்களில் அதிகமாக துஆச் செய்தல்

கஷ்டமான காலங்களில் தம் துஆவை அல்லாஹு தஆலா ஏற்றுக் கொள்ள வேண்டுமென ஆசைப்படுபவர், தம் வசதியான (மகிழ்ச்சியான) காலங்களில் அல்லாஹு தஆலாவிடம் அதிகமாகக்

பொருளடக்கம்

கேட்கட்டும் என மாநபி (ஸல்) அவர்கள் ஒரு மணிமொழியில் அருளியுள்ளார்கள். (திர்மிதி)

ஆகவே கஷ்டங்கள், சோதனைகள், நோய் நொடிகள் வரும் பொழுது மட்டும் துஆச் செய்யாமல், நல்ல உடல் நலமுடனும் ஆரோக்கியத்துடனும் செல்வச் செழிப்புடனும் வாழும் காலங்களில் அல்லாஹ்வு தஆலாவிடம் அதிகம் துஆச் செய்து வரவேண்டும். மகிழ்ச்சியான வேளைகளில் அவனுக்கு நன்றிச் செலுத்துவதுடன் துஆவும் இறைஞ்சி வரவேண்டும்.

மேலும் துஆக் கேட்காத மனிதனை அல்லாஹ் கோபிக்கிறான் என மாநபி (ஸல்) அவர்கள் ஒரு மணிமொழியில் கூறியுள்ளார்கள்.

விதியையும் மாற்றும் வலிமை மிகு துஆ

"துஆவே தவிர வேறெதுவும் (உங்கள்) விதியை மாற்றுவதில்லை. நன்மையான செயல்களே தவிர வேறெதுவும் உங்கள் ஆயுளை அதிகரிப்பதில்லை" என மாநபி (ஸல்) அவர்கள் மற்றொரு மணிமொழியில் கூறியுள்ளார்கள்.

(ஹாகிம், திர்மிதி)

ஆகவே அனைத்துக் காலங்களிலும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் அல்லாஹு தஆலாவிடம் அதிகம் துஆச் செய்து வர விழைவோமாக!

பொருளடக்கம்

துஆ ஒப்புக் கொள்ளப்பட சில வழிமுறைகள்

நம் துஆ ஒப்புக் கொள்ளப்பட சில முயற்சிகளையும் நாம் செய்ய வேண்டும். குறிப்பாக "இக்லாஸ்" எனும் மனத் தூய்மையுடன் துஆவைச் செய்ய வேண்டும். நாம் உண்ணும் உணவை நல்ல ஆகுமான (ஹலாலான) ரிஜ்கிலிருந்து ஆக்கிக் கொள்ள வேண்டும். இதயத்தின் சிந்தனைகளைச் சிதற விடாமல், மன ஒர்மையுடன் உறுதியாக அல்லாஹ்விடம் கேட்கவேண்டும். அவனிடம் கெஞ்சி, பணிந்துக் கேட்கவேண்டும்.

நன்மையான விஷயங்களையே கேட்க வேண்டும். கெட்ட விஷயங்களையோ, பிறருக்கு தீங்கு இழைப்பதையோ, உற்றாரின் உறவைத் துண்டிப்பதையோ கேட்கக்கூடாது.

மேலும் துஆச் செய்து விட்டு அவசரப்படக்கூடாது. பொறுமையுடனும், ஆவலுடனும் அது ஒப்புக் கொள்ளப்படுவதை எதிர்பார்க்க வேண்டும்.

மேலும் துஆ ஒப்புக் கொள்ளப்படும் நேரங்களை கவனித்துக் கொள்ள வேண்டும். துஆ ஒப்புக் கொள்ளப் படக்கூடிய இடங்களையும் கவனித்துக் கொள்ள வேண்டும்.

துஆ ஒப்புக்கொள்ளப்படும் சில நேரங்கள்

பொதுவாக அடியார்களின் துஆவை அல்லாஹு தஆலா எல்லா நேரங்களிலும், எல்லா

பொருளடக்கம்

இடங்களிலும் ஏற்கிறான். என்றாலும் குறிப்பாக சில நேரங்களின் சிறப்பையும், சில இடங்களின் சிறப்பையும் கவனித்து அந்த நேரங்களில், அந்த இடங்களில் செய்யப்படும் துஆவை அல்லாஹு தஆலா சிறப்பாகவும் விரைவாகவும் ஏற்கிறான்.

ஸஹ்ரின் நேரம், நோன்பு திறக்கும் வேளை, பாங்கு இகாமத்திற்கு மத்தியிலுள்ள நேரம், பிரயாணத்தின் நேரங்கள், மழை பொழியும் வேளை, நோயின் நிலை, அல்லாஹ்வின் பாதையில் அணிவகுத்து நிற்கும் நிலை, கடினமான இருள், ஜும்ஆ நாளில் ஒரு நேரம், (அது ஜும்ஆ அன்று அஸர் நேரத்தின் கடைசி நேரம் ஆகும் என்பது மிக ஊர்ஜிதமான கருத்தாகும். தொழுகை மற்றும் குத்பாவின் நேரமாகவும் இருக்கலாம்) காற்று வீசும் நேரம், ஜம் ஜம் தண்ணீர் அருந்தும் வேளை, ஒவ்வொரு பர்ளான தொழுகைக்குப் பின் உள்ள நேரம் ஆகிய நேரங்கள் துஆ ஒப்புக் கொள்ளப்படும் சிறப்புமிகு சில நேரங்களாகும்.

துஆ ஒப்புக் கொள்ளப்படும் சில இடங்கள்

புனித கஃபா, முல்தஜிம், மதாப் - தவாப் செய்யும் இடங்கள், ஹஜருல் அஸ்வத், ஜம்ஜம் கிணறு, மகாமு இப்றாஹீம், மீஜாப், அரஃபாத், மினா, முஜ்தலிஃபா, மஸ்ஜிதுன் நபவி, மற்றும் இறை யில்லங்களான மஸ்ஜிதுகள், அல்லாஹ்வை திக்ருச் செய்யப்படும் மஜ்லிஸ்கள் (அவைகள்) ஆகிய சங்கைமிகு இடங்களில் துஆ ஒப்புக் கொள்ளப் படுகிறது.

பொருளடக்கம்

மேலும் அரஃபா நாள், ரமலான் மாதம், லைலத்துல் கத்ருடைய இரவு, ஜும்ஆ நாளின் இரவு - பகல், தொழுகையில் ஸஜ்தாவின் நிலை ஆகியவற்றிலும் துஆ ஒப்புக் கொள்ளப்படுகிறது.

விரைவாக ஒப்புக் கொள்ளப்படும் துஆக்கள்

பெற்றோரின் துஆ, பிரயாணிகளின் துஆ, அநீதி இழைக்கப்பட்டவரின் துஆ, ஹஜ்ஜுச் செய்பவரின் துஆ, உம்ராச் செய்பவரின் துஆ, அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரிபவரின் துஆ, ஒரு சகோதரர், மற்றொரு சகோதரருக்கு மறைமுகமாகச் செய்யும் துஆ ஆகிய துஆக்களும் விரைவில் அங்கீகரிக்கப்படும்.

நமக்கு நாம் துஆச் செய்து கொள்வதுடன் நம் பெற்றோர், சகோதர சகோதரிகள், மனைவி, மக்கள், உற்றார் உறவினர்கள், ஆசிரியப் பெருந்தகைகள் பெரியோர்கள், உலமாப் பெருமக்கள், சாலிஹீன்கள் எனும் நல்லோர்கள், இறைநேசச் செல்வர்கள், ஹஜ், உம்ராச் செய்பவர்கள், பிரயாணிகள் ஆகியோரிடம் நமக்காக துஆச் செய்யும்படி வேண்டுகோள் விடுக்க வேண்டும். அவர்களுக்காக நாமும் துஆச் செய்து வர வேண்டும்.

ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு முறை உம்ராவுக்கு புறப்படும்போது என் அருமை சகோதரரே! உம்முடைய துஆவில் நம்மை மறந்துவிட வேண்டாம் என அண்ணல் நபி (ஸல்) அவர்கள்

பொருளடக்கம்

பகர்ந்தார்கள். மற்றொரு அறிவிப்பில், உம் துஆவில் நம்மையும் சேர்த்துக் கொள்வீராக! என அண்ணலார் பகர்ந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

துஆவின் ஆரம்பத்தில் அல்லாஹ்வைப் புகழ்தல். பின்னர் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் கூறுதல். துஆவின் முடிவில் ஆமீன் கூறுதல். இரு கரங்களையும் வானின் பக்கம் உயர்த்துதல்

துஆவை ஆரம்பிக்கும் பொழுது அல்லாஹ்வை போற்றிப் புகழ வேண்டும். பின்னர் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் கூறவேண்டும். பின்னர் நம் தேவைகளை அல்லாஹு தஆலாவிடம் கேட்கவேண்டும். இது அண்ணலார் காட்டிய அழகிய நடைமுறை ஆகும். நபி வழியைச் சேர்ந்ததாகும்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பகர்ந்தார்கள்: "உங்களில் ஒருவர் துஆச் செய்தால், தம் ரப்பை கண்ணியப்படுத்துவது, புகழ்வது கொண்டு ஆரம்பிக்கட்டும். பின்னர் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் கூறட்டும். பின்னர் தான் விரும்பியதை துஆக் கேட்கட்டும்". (நஸயீ, திர்மிதி)

துஆவின் முடிவிலும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் கூற வேண்டும். தம் இரு கரங்களையும் வானின் பக்கம் உயர்த்தி துஆச் செய்வதும், துஆச் செய்து முடித்ததும், அக்கரங்களை

பொருளடக்கம்

தம் முகத்தில் தடவிக் கொள்வதும் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் நல்வழியாகும். துஆவின் முடிவில் ஆமீன் கூறுவதும் நபி வழியாகும். இவை அந்த துஆ ஒப்புக் கொள்ளப்பட காரணமாக அமையும்.

துஆக் கேட்காதவரின் நிலை

துஆக் கேட்காமல் பெருமையாகவோ, அலட்சியமாகவோ இருக்கும் அடியானை அல்லாஹ் கோபிக்கிறான். அவன் மீது அதிருப்தி கொள்கிறான். அவன் நாடினால் அவனின் சோதனையையும், வேதனையையும் அவ்வடியான் மீது. இறக்கி விடுவான். இக்கருத்துகளைப் பின்வரும் நபி மொழி எடுத்துரைக்கிறது.

நிச்சயமாக அல்லாஹு தஆலா அவனிடம் துஆக் கேட்காத அடியான் மீது கோபம் அடைகிறான்.

(திர்மிதி)

இந்நிலை தவிர்த்து, அதிகமாக துஆக் கேட்கும் நல்லடியார்களின் அணியில் அல்லாஹ் நம்மைச் சேர்த்தருள்வானாக! கருணையுள்ள ரஹ்மானாகிய அவன் நம் துஆக்களை ஏற்று அருள்புரிவானாக! ஆமீன்.



பொருளடக்கம்

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

1. தூங்கி எழுந்தவுடன் ஓதும் துஆ

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِىْ اَحْيَانَا بَعْدَ مَا اَمَاتَنَا وَاِلَيْهِ النُّشُوْرُ

அல்ஹம்து லில்லாஹில்லதீ அஹ்யானா பஃத மா அமாதனா வஇலைஹின் நுஷூர்

பொருள்: எங்களை உறங்கச் செய்த பிறகு மீண்டும் விழித்தெழச் செய்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். மேலும் அவன் பக்கமே திரும்பிச் செல்லுதல் உள்ளது.

(புகாரி, முஸ்லிம்)

2. கழிவறையில் நுழையும் முன் ஓதும் துஆ

اَللّٰهُمَّ اِنِّىْ اَعُوْذُبِكَ مِنَ الْخُبُثِ وَالْخَبَائِثِ

அல்லாஹும்ம இன்னீ அவூது பிக மினல் குபுதி வல் கபாயிஸ்.

பொருள்: யா அல்லாஹ்! ஆண், பெண் ஷைத்தான்களின் தீங்கை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன். (திர்மிதி)

குறிப்பு: கழிவறையில் நுழையும் போது இடது காலை முன்வைத்துச் செல்லவேண்டும். வெளியில் வரும் பொழுது வலது காலை முன்வைத்து வரவேண்டும்.

3. கழிவறையிலிருந்து வெளியில் வரும் போது ஓதும் துஆ

غُفْرَانَكَ اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِىْ اَذْهَبَ عَنِّى الْاَذٰى وَعَافَانِىْ

பொருளடக்கம்

குஃப்ரானக அல்ஹம்து லில்லாஹில்லதீ அத்ஹப அன்னில் அதா வஆஃபானீ

பொருள்: (யா அல்லாஹ்!) என் பாவங்களுக்கு உன்னிடம் மன்னிப்புத் தேடுகிறேன். எனக்கு நோவினை தரும் (கழிவுப்) பொருளை என்னை விட்டு வெளியேற்றி எனக்கு ஆரோக்கியத்தை தந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

(அபூதாவூது, திர்மிதி)

குறிப்பு: அண்ணல் (ஸல்) அவர்கள் கழிவறைக்குள் நுழைந்தால் தங்கள் செருப்பை அணிந்துக் கொள்வார்கள். தங்கள் தலையை மறைத்துக் கொள்வார்கள். (இப்னு ஸஃது)

4. புத்தாடை அணியும் போது ஓதும் துஆ

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِىْ كَسَانِىْ مَا اُوَارِىْ بِهٖ عَوْرَتِىْ
وَاَتَجَمَّلُ بِهٖ فِىْ حَيَاتِىْ

அல்ஹம்து லில்லாஹில்லதீ கஸானீ மா உவாரீ பிஹி அவ்ரதீ வஅதஜம்மலு பிஹி ஃபீ ஹயாத்தீ.

பொருள்: என் மானத்தை நான் மறைத்து, என் வாழ்வில் நான் அலங்காரம் பெறும் ஆடையை எனக்கு அணிவித்த அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும்.

(அஹ்மது, திர்மிதி)

5. ஒளூச் செய்ய ஆரம்பிக்கும் போது.......

بِسْمِ اللّٰهِ الْعَظِيْمِ وَالْحَمْدُ لِلّٰهِ عَلٰى دِيْنِ الْاِسْلَامِ

பொருளடக்கம்

பிஸ்மில்லாஹில் அளீம் வல்ஹம்து லில்லாஹி அலா தீனில் இஸ்லாம்.

என்று ஓதவும்.

பொருள்: மகத்துவமிக்கவனான அல்லாஹ்வின் திருப்பெயரால் (ஒலூச் செய்ய ஆரம்பம் செய்கிறேன்). தீனுல் இஸ்லாமை எனக்கு வழங்கியமைக்காக அல்லாஹு தஆலாவிற்கே எல்லாப் புகழும்.

6. ஒலூச் செய்து முடிந்தபின் ஓதும் துஆ

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ اَللّٰهُمَّ اجْعَلْنِىْ مِنَ التَّوَّابِيْنَ وَاجْعَلْنِىْ مِنَ الْمُتَطَهِّرِيْنَ

அஷ்ஹது அன் லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக லஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸுலுஹு அல்லாஹும்மஜ்அல்னீ மினத் தவ்வாபீன வஜ்அல்னீ மினல் முததஹ்ஹிரீன்.

பொருள்: வணக்கத்திற்குரியவன் அல்லாஹு தஆலாவைத் தவிர வேறு யாருமில்லை என்று சான்று பகருகிறேன். அவன் தனித்தவன். அவனுக்கு இணையானவன் யாருமில்லை. மேலும் முஹம்மது (ஸல்) அவர்கள், அல்லாஹு தஆலாவின் அடியாராகவும் அவனின் திருத்தூதராகவும் உள்ளார்கள் என்றும் சான்று பகர்கிறேன்.

பொருளடக்கம்

யா அல்லாஹ்! என்னை உன்னளவில் பாவமன்னிப்புத் தேடி மீளுபவர்களில் நின்றும் ஆக்குவாயாக. மேலும் என்னை பரிசுத்தமான வர்களில் நின்றும் ஆக்குவாயாக.

(முஸ்லிம், திர்மிதி)

7. மஸ்ஜிதில் நுழையும் போது ஓதும் துஆ

بِسْمِ اللّٰهِ وَالصَّلَاةُ وَالسَّلَامُ عَلٰى رَسُوْلِ اللّٰهِ اَللّٰهُمَّ افْتَحْ

لِىْ اَبْوَابَ رَحْمَتِكَ

பிஸ்மில்லாஹி வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா ரஸூலில்லாஹி அல்லாஹும்ம மஃப்தஹ் லீ அப்வாப ரஹ்மதிக.

பொருள்: அல்லாஹ்வின் திருப்பெயரால் (நுழைகிறேன்). அவன் கருணையும், சாந்தியும் நபி (ஸல்) அவர்கள் மீது உண்டாவதாக! யா அல்லாஹ்! உன் கிருபையின் வாசல்களை எனக்குத் திறப்பாயாக.

(புகாரி, முஸ்லிம்)

8.மஸ்ஜிதிலிருந்து வெளியேறும் போது ஓதும் துஆ

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ اَللّٰهُمَّ اِنِّىْ اَسْأَلُكَ

مِنْ فَضْلِكَ وَرَحْمَتِكَ

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக மின் பள்லிக வரஹ்மதிக.

பொருள்: யா அல்லாஹ்! முஹம்மது (ஸல்) அவர்கள் மீது உன் கருணையைப் பொழிவாயாக! யா அல்லாஹ்! உன் அருட்கொடையையும், உன் கிருபையையும் நிச்சயமாக நான் உன்னிடம் கேட்கிறேன். (அபூதாவூது, முஸ்லிம்)

9. பர்ளான தொழுகை முடிந்த பின் ஓதும் துஆக்கள்

اَللّٰهُمَّ اَعِنِّىْ عَلٰى ذِكْرِكَ وَشُكْرِكَ وَحُسْنِ عِبَادَتِكَ

அல்லாஹும்ம அஇன்னீ அலா திக்ரிக வஷுக்ரிக வஹுஸ்னி இபாததிக.

பொருள்: யா அல்லாஹ்! உன்னை நினைவு கூர்வதற்கும், உனக்கு நன்றிச் செலுத்துவதற்கும், உன்னை அழகிய முறையில் வணங்குவதற்கும் எனக்கு நல்லுதவிச் செய்வாயாக!

(அபூதாவூது)

اَللّٰهُمَّ اَنْتَ السَّلَامُ وَمِنْكَ السَّلَامُ تَبَارَكْتَ
يَاذَا الْجَلَالِ وَالْاِكْرَامِ

அல்லாஹும்ம அன்தஸ் ஸலாம் வமின்கஸ் ஸலாம் தபாரக்த யாதல் ஜலாலி வல்இக்ராம்

பொருள் : யா அல்லாஹ்! நீயே சாந்தி உடையவன். உன்னிடமிருந்தே சாந்தி உண்டாகின்றது. நீ மிக்க பாக்கியமுடையவனாகத் திகழ்கிறாய். கண்ணியமும், சங்கையும் மிக்கவனே! (முஸ்லிம்)

பொருளடக்கம்

10.வீட்டிலிருந்து புறப்படும் போது ஓதும் துஆ

بِسْمِ اللهِ تَوَكَّلْتُ عَلَى اللهِ لَاحَوْلَ وَلَا قُوَّةَ اِلَّا بِاللهِ

பிஸ்மில்லாஹி தவக்கல்து அலல்லாஹி லா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹி

பொருள்: அல்லாஹ்வின் திருப்பெயரால் (என் இல்லத்திலிருந்து புறப்படுகிறேன்.) அல்லாஹ்வின் மீது (தவக்குல்) முழுப்பொறுப்பும் சாட்டிவிட்டேன். எந்தத் திருப்பமும், எந்த சக்தியும் அல்லாஹ்வின் உதவிக் கொண்டே தவிர இல்லை.

(திர்மிதி)

குறிப்பு: இந்த துஆவை ஓதிச் சென்றால், வலிநெடுக அனைத்துத் தீங்குகளை விட்டும், ஆபத்துகளை விட்டும் அல்லாஹு தஆலா அவரைப் பாதுகாப்பான். ஷைத்தானின் தீங்குகளை விட்டும் அவர் காப்பாற்றப்படுவார்.

11. வீட்டினுள் நுழையும் போது ஓதும் துஆ

اَللّٰهُمَّ اِنِّیْ اَسْئَلُكَ خَيْرَ الْمَوْلِجِ وَخَيْرَ الْمَخْرَجِ بِسْمِ اللهِ وَلَجْنَا وَعَلَى اللهِ رَبِّنَا تَوَكَّلْنَا

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக கைரல் மவ்லிஜி வகைரல் மக்ரஜி பிஸ்மில்லாஹி வலஜ்னா வஅலல்லாஹி ரப்பினா தவக்கல்னா.

பொருள்: யா அல்லாஹ்! இவ்வீட்டில் நன்மையான

நுழைதலையும், இவ்வீட்டிலிருந்து நன்மையான வெளியேறுதலையும் நிச்சயமாக நான் உன்னிடம் கேட்கிறேன். அல்லாஹ்வின் திருப்பெயரால் (நாங்கள் வீட்டில்) நுழைகிறோம். மேலும் எங்கள் இரட்சகனான அல்லாஹ்வின் மீதே முழுப்பொறுப்பும் வைத்துள்ளோம். (அபூதாவூது)

12. உணவு உண்ண ஆரம்பிக்கும் போது........

بِسْمِ اللّٰهِ وَعَلٰى بَرَكَةِ اللّٰهِ

பிஸ்மில்லாஹி வஅலா பரக்கதில்லாஹ்

என்று ஓதவும்.

பொருள்: அல்லாஹ்வின் திருப்பெயரால் (உண்ண ஆரம்பிக்கிறேன்). மேலும் அவனின் பரக்கத்-அபிவிருத்தியின் மீதும் (ஆரம்பிக்கிறேன்).

(முஸ்தத்ரக்)

13. பிஸ்மில்லாஹ் சொல்ல மறந்து விட்டால்......

بِسْمِ اللّٰهِ اَوَّلَهُ وَاٰخِرَهُ

பிஸ்மில்லாஹி அவ்வலஹு வஆகிரஹு

என்று கூறிக்கொள்ளவும்.

பொருள்: இவ்வுணவின் ஆரம்பத்திலும், இறுதியிலும் அல்லாஹ்வின் திருப்பெயரால் (உண்ணுகிறேன்).

14. உணவு உண்ட பின் ஓதும் துஆ

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِىْ اَطْعَمَنَا وَسَقَانَا وَجَعَلَنَا مِنَ الْمُسْلِمِيْنَ

பொருளடக்கம்

அல்ஹம்து லில்லாஹில்லதீ அத்அமனா வஸகானா வஜஅலனா மினல் முஸ்லிமீன்.

பொருள்: எங்களை உண்ணவும், பருகவும் செய்து மேலும் எங்களை முஸ்லிம்களாகவும் ஆக்கியமைத்த அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும்.

(திர்மிதி, அபூதாவூது, இப்னுமாஜா)

குறிப்பு : உணவின் விரிப்பில் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து உண்ணுவது சுன்னத்தான நடைமுறையாகும். அதில் அதிகமான பரக்கத்துகள் அருளப்படுகின்றன.

15. பால் அருந்தினால் ஓதும் துஆ

اَللّٰهُمَّ بَارِكْ لَنَا فِيْهِ وَزِدْنَا مِنْهُ

அல்லாஹும்ம பாரிக் லனா ஃபீஹி வஜித்னா மின்ஹு

பொருள்: யா அல்லாஹ்! இப்பாலில் எங்களுக்கு அபிவிருத்தி நல்குவாயாக! அதனை மேலும் அதிகமாக எங்களுக்கு அளிப்பாயாக! (திர்மிதி)

16. விருந்து உண்டால் ஓதும் துஆக்கள்

اَللّٰهُمَّ اَطْعِمْ مَنْ اَطْعَمَنَا وَاسْقِ مَنْ سَقَانَا
وَاجْعَلْنَا مِنَ الشَّاكِرِيْنَ

அல்லாஹும்ம அத்இம் மன் அத்அமனா வஸ்கி மன் ஸகானா வஜ்அல்னா மினஷ் ஷாகிரீன்.

பொருள்: யா அல்லாஹ்! எங்களுக்கு

உணவளித்தவர்களுக்கு நீ உணவு அளிப்பாயாக! எங்களுக்கு பானம் புகட்டியவர்களுக்கு நீ பானம் புகட்டுவாயாக! உனக்கு நன்றிச் செலுத்தக் கூடியவர்களில் நின்றும் எங்களை ஆக்கி வைப்பாயாக! (முஸ்லிம்)

17. வாகனத்தில் ஏறும் போது ஓதும் துஆ

سُبْحَانَ الَّذِىْ سَخَّرَلَنَا هٰذَا وَمَا كُنَّا لَهٗ مُقْرِنِيْنَ
وَاِنَّا اِلٰى رَبِّنَا لَمُنْقَلِبُوْنَ

ஸுப்ஹானல்லதீ ஸக்கர லனா ஹாதா வமா குன்னா லஹு முக்ரினீன் வஇன்னா இலா ரப்பினா லமுன்கலிபூன்.

பொருள்: இவ்வாகனத்தின் மீது நாங்கள் ஆற்றல் பெறாதவர்களாக இருக்கும் நிலையில், இவ்வாகனத்தை எங்களுக்கு கைவசப்படுத்தித் தந்த அல்லாஹ் தூய்மையானவன் எனப் புகழ்ந்துரைக்கிறேன். மேலும் நிச்சயமாக நாங்கள் எங்கள் இரட்சகனின் பக்கமே திரும்பக் கூடியவர்களாக உள்ளோம்.

18. வாகனத்திலிருந்து இறங்கும் போது ஓதும் துஆ

رَبِّ اَنْزِلْنِىْ مُنْزَلًا مُّبَارَكًا وَّاَنْتَ خَيْرُ الْمُنْزِلِيْنَ

ரப்பி அன்ஜில்னீ முன்ஜலன் முபாரகன் வஅன்த கைருல் முன்ஜிலீன்.

பொருளடக்கம்

பொருள்: என் இரட்சகனே! பரக்கத் பொருந்திய இடத்தில் என்னை இறக்குவாயாக! நிச்சயமாக நீயே இறக்கிவைப்பவர்களில் மிகச் சிறந்தவன். (அல்குர்ஆன்: 23-29)

19. கடைவீதியில் நுழையும் போது ஓதும் திக்ரு

لَاإِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ
يُحْيِيْ وَيُمِيْتُ وَهُوَ حَيٌّ لَّا يَمُوْتُ بِيَدِهِ الْخَيْرُ
وَهُوَ عَلٰى كُلِّ شَيْئٍ قَدِيْرٌ

லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக்க லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து யுஹ்யீ வயுமீத்து வஹுவ ஹய்யுன் லா யமூத்து பியதிஹில் கைரு வஹுவ அலா குல்லி ஷையின் கதீர்.

பொருள்: வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணையானவன் யாரும் கிடையாது. ஆட்சி அவனுக்கே உரித்தானது. அவன் (படைப்புகளை) உயிர்ப்பிக்கிறான். அவனே மரணிக்கச் செய்கிறான். அவன் என்றும் உயிருள்ளவன். அவன் மரணிக்க மாட்டான். நலவனைத்தும் அவன் கரத்திலேயே உள்ளது. அவன் அனைத்து விஷயங்கள் மீதும் ஆற்றல் படைத்தவன்.

(அஹ்மது, திர்மிதி, ஹாகிம்)

பொருளடக்கம்

20. முதல் பிறையைக் காணும் போது ஓதும் துஆ

اَللّٰهُمَّ اَهِلَّهُ عَلَيْنَا بِالْيُمْنِ وَالْاِيْمَانِ وَالسَّلَامَةِ وَالْاِسْلَامِ
وَالتَّوْفِيْقِ لِمَا تُحِبُّ وَتَرْضٰى رَبِّيْ وَرَبُّكَ اللّٰهُ

அல்லாஹும்ம அஹில்லஹு அலைனா பில்யும்னி வல்ஈமானி வஸ்ஸலாமதி வல்இஸ்லாமி வத்தவ்ஃபீகி லிமா துஹிப்பு வ தர்ளா ரப்பீ வரப்புகல்லாஹ்

பொருள்: யா அல்லாஹ்! செழிசெழிப்பையும், ஈமானையும், ஈடேற்றத்தையும், இஸ்லாமையும், நீ விரும்பிப் பொருந்திக் கொள்ளும் காரியங்களுக்கு நல்லுதவி புரிவதையும் கொண்டு எங்களுக்கு இவ்விளம்பிறையை உதிக்கச் செய்வாயாக! (இளம்பிறையே!) என்னுடைய இரட்சகனும், உன்னுடைய இரட்சகனும் அல்லாஹ் தான்.

(திர்மிதி)

21. திருமணத்தின் போது வாழ்த்துக் கூறி ஓதும் துஆ

بَارَكَ اللّٰهُ لَكَ وَبَارَكَ عَلَيْكُمَا وَجَمَعَ بَيْنَكُمَا فِيْ خَيْرٍ

பாரகல்லாஹு லக வபாரக அலைக்குமா வஜமஅ பைனகுமா ஃபீ கைர்.

பொருள்: (மணமகனே), உன் இல்லற வாழ்வில் அல்லாஹ் உமக்கு பரக்கத் - அபிவிருத்தி நல்குவானாக! மேலும் உங்களிருவருக்கும்

அபிவிருத்தி நல்குவானாக! மேலும் உங்களிருவரையும் நன்மையான விஷயத்தில் ஒன்றுச் சேர்ப்பானாக!

(அபூதாவூது, இப்னுமாஜா)

22. மணப்பெண்ணை முதலில் சந்திக்கும் போது ஓதும் துஆ

اَللّٰهُمَّ اِنِّيْ اَسْئَلُكَ خَيْرَهَا وَخَيْرَ مَا جَبَلْتَهَا عَلَيْهِ
وَأَعُوْذُبِكَ مِنْ شَرِّهَا وَشَرِّ مَا جَبَلْتَهَا عَلَيْهِ

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக கைரஹா வகைர மா ஜபல்தஹா அலைஹி வஅவூது பிக மின் ஷர்ரிஹா வஷர்ரி மா ஜபல்தஹா அலைஹி

பொருள்: யா அல்லாஹ்! இப்பெண்ணின் நலவையும் இப்பெண்ணை எந்த இயல்பின் மீது (குணம், பழக்க வழக்கங்கள்) மீது நீ படைத்திருக்கிறாயோ அதன் நலவையும் நிச்சயமாக நான் உன்னிடம் கேட்கிறேன். மேலும் இப்பெண்ணின் தீங்கை விட்டும், இப்பெண்ணை எந்த இயல்பின் மீது நீ படைத்திருக்கிறாயோ அதன் தீங்கை விட்டும் நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

(அபூதாவூது, இப்னுமாஜா)

23. சுவர்க்கத்தின் மரக்கன்றுகளை பெற்றுத் தரும் திக்ரு

سُبْحَانَ اللهِ وَالْحَمْدُ لِلّٰهِ وَلَا اِلٰهَ اِلَّا اللهُ وَاللهُ اَكْبَرُ

பொருளடக்கம்

ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வலா இலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர்

பொருள்: அல்லாஹ் தூய்மையானவன். அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அல்லாஹ்வே மிகப் பெரியவன்.

(திர்மிதி)

குறிப்பு : இந்த திக்ரை எவ்வளவு அதிகமாக ஒருவர் ஓதுகிறாரோ அவ்வளவு அதிகமான மரக்கன்றுகள் அவருக்கு சுவர்க்கத்தில் நடப்படும்.

24. கடன் நீங்க ஓதும் துஆ

اَللّٰهُمَّ اكْفِنِىْ بِحَلَالِكَ عَنْ حَرَامِكَ وَاغْنِنِىْ بِفَضْلِكَ عَمَّنْ سِوَاكَ

அல்லாஹும்மக்ஃபினீ பி ஹலாலிக அன் ஹராமிக வஅஃனினீ பி ஃபள்லிக அம்மன் ஸிவாக

பொருள்: யா அல்லாஹ்! உன் ஹராமான ரிஜ்கை விட்டும் உன் ஹலாலான ரிஜ்கைக் கொண்டு எனக்கு போதுமாக்கி வைப்பாயாக! உன்னைத் தவிர பிறரிடம் தேவையாகுவதை விட்டும் உன் அருட் கொடையைக் கொண்டு எனக்கு செல்வச் செழிப்பை அருள்வாயாக! (திர்மிதி)

குறிப்பு: மலையளவு கடன் இருந்தாலும் இந்த துஆவின் பொருட்டால் அவற்றை நீக்கி வைக்க அல்லாஹ் போதுமானவன் என ஹஜ்ரத் அலீ (ரலி)

பொருளடக்கம்

அவர்கள் கூறியுள்ளார்கள்.

(திர்மிதி)

25.கவலைகள் நீங்க ஓதும் துஆ

اَللّٰهُمَّ اِنِّىْ اَعُوْذُبِكَ مِنَ الْهَمِّ وَالْحُزْنِ وَاَعُوْذُبِكَ مِنَ الْعَجْزِ وَالْكَسْلِ وَاَعُوْذُبِكَ مِنَ الْبُخْلِ وَالْجُبْنِ وَاَعُوْذُبِكَ مِنْ غَلَبَةِ الدَّيْنِ وَقَهْرِ الرِّجَالِ

அல்லாஹும்ம இன்னீ அவூது பிக மினல் ஹம்மி வல்ஹுஜ்னி வஅவூது பிக மினல் அஜ்சி வல்கஸ்லி வஅவூது பிக மினல் புக்லி வல்ஜுப்னி வஅவூது பிக மின் கெலபதித் தைனி வகஹ்ரிர் ரிஜால்.

பொருள்: யா அல்லாஹ்! கவலை, துக்கத்தை விட்டும் நிச்சயமாக நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன். மேலும் பலவீனத்தை விட்டும், சோம்பேறித்தனத்தை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன். மேலும் கஞ்சத்தனத்தை விட்டும், கோழைத்தனத்தை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன். மேலும் கடன் மிகைப்பதை விட்டும், மனிதர்களின் ஆதிக்கத்தை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்.

(அபூதாவூது)

குறிப்பு: யார் இந்த துஆவை காலை, மாலை, ஓதி வருகிறாரோ அல்லாஹு தஆலா அவரின் கவலைகளைப் போக்கி, அவரின் கடனையும் நீக்கி

பொருளடக்கம்

வைப்பான் என தங்களிடம் கஷ்டத்தை முறையிட்ட ஒரு மனிதருக்கு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அபூதாவூது)

26. கவலையான செய்திகள், மரணச் செய்தி ஆகியவை கேட்டால் ஓதும் துஆ

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ اَللّٰهُمَّ أْجُرْنِيْ فِيْ مُصِيْبَتِيْ وَاخْلُفْ لِيْ خَيْرًا مِنْهُ

இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். அல்லாஹும்ம ம∴ஜுர்னி ∴பீ முஸீபதி வக்லி∴ப் லீ கைரன் மின்ஹு

பொருள்: நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள். நிச்சயமாக நாம் அல்லாஹ்வின் பக்கமே திரும்பக் கூடியவர்கள். யா அல்லாஹ்! என் கஷ்டத்தில் எனக்கு நற்கூலியைக் கொடுப்பாயாக! இதனை விடச் சிறந்ததை எனக்கு பகரமாக்கித் தருவாயாக! (முஸ்லிம்)

27. தும்மல் ஏற்பட்டால் ஓதும் திக்ரு

اَلْحَمْدُ لِلّٰهِ - **அல்ஹம்து லில்லாஹி**

பொருள்: (அனைத்துப் புகழும்) அல்லாஹ்வுக்கே!) அதைக் கேட்பவர் يَرْحَمُكَ اللّٰهُ -**யர்ஹமுகல்லாஹ்.** (அல்லாஹ் உனக்கு கிருபைக் காட்டுவானாக!) என்று கூறவும். அதனைக் கேட்டதும் தும்மியவர்,

يَهْدِيْكُمُ اللّٰهُ وَيُصْلِحُ بَالَكُمْ -யஹ்தீகுமுல்லாஹு வயுஸ்லிஹு பாலகும். (அல்லாஹ் உங்களுக்கு நேர்வழிக் காட்டுவானாக. உங்கள் நிலையைச் சீர்படுத்துவானாக!) என்று கூறவும். (புகாரி)

28. கொட்டாவி விட்டால் ஓதும் துஆ

اَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ

அவூது பில்லாஹி மினஷ் ஷைத்தானிர் ரஜீம்

என்று கூறி இயன்றளவு கையை வாயில் வைத்து கொட்டாவியைத் தடுத்துக் கொள்ளவும்.

பொருள்: விரட்டப்பட்ட ஷைத்தானை விட்டும் அல்லாஹ்விடம் நான் பாதுகாவல் தேடுகிறேன்.

29. கல்வி ஞானம் பெருக ஓதும் துஆ

رَبِّ زِدْنِيْ عِلْمًا - ரப்பி ஜித்னீ இல்மா

பொருள்: என் இரட்சகனே! எனக்கு அறிவு ஞானத்தை அதிகப்படுத்துவாயாக!

(அல்குர்ஆன்: 20-14)

30. தூங்கும் பொழுது ஓதும் துஆ

اَللّٰهُمَّ بِاسْمِكَ اَمُوْتُ وَاَحْيَا

அல்லாஹும்ம பிஸ்மிக அமூத்து வஅஹ்யா

பொருள்: யா அல்லாஹ்! உன் திருப்பெயர் கொண்டு உறங்குகிறேன். மேலும் உன் திருப்பெயர் கொண்டு விழித்தெழுகிறேன். (புகாரி)

பொருளடக்கம்

31. பெற்றோருக்காகச் செய்யும் துஆ

رَبِّ ارْحَمْهُمَا كَمَا رَبَّيَانِيْ صَغِيْرًا

ரப்பிர்ஹம்ஹுமா கமா ரப்பயானீ ஸகீரா

பொருள்: என் இரட்சகனே! நான் சிறு பிள்ளையாக இருக்கும் போது என்னை (அன்புடன்) அவ்விருவரும் வளர்த்தது போல அவ்விருவருக்கும் கருணை காட்டுவாயாக! (அல்குர்ஆன்:17-24)

32. இரணம், ஆரோக்கியத்தைக் கேட்கும் துஆ

اَللّٰهُمَّ اغْفِرْلِيْ وَارْحَمْنِيْ وَاهْدِنِيْ وَعَافِنِيْ وَارْزُقْنِيْ

அல்லாஹும்ம ஃபிர்லீ வர்ஹம்னீ வஹ்தினீ வஆஃபினி வர்ஜுக்னீ

பொருள்: யா அல்லாஹ்! என் பிழைகளைப் பொறுப்பாயாக! எனக்கு கிருபைச் செய்வாயாக! எனக்கு நேர்வழிக் காட்டுவாயாக! எனக்கு ஆரோக்கியத்தை நல்குவாயாக! எனக்கு இரணத்தை (ரிஜ்கை) அருள்வாயாக!

(திர்மிதி, இப்னுமாஜா)

33. பாவ மன்னிப்பிற்காக ஓதும் இஸ்திஃபார்

اَسْتَغْفِرُ اللّٰهَ الَّذِيْ لَا اِلٰهَ اِلَّا هُوَ الْحَيُّ الْقَيُّوْمُ وَاَتُوْبُ اِلَيْهِ

அஸ்தஃபிருல்லாஹல்லதீ லாஇலாஹ இல்லா ஹுவல் ஹய்யுல் கையூம் வஅதூபு இலைஹி

பொருள்: நான் அல்லாஹ்விடம் பிழைப் பொறுக்க இறைஞ்சுகிறேன். அவனைத் தவிர எந்த

வணக்கத்திற்குரிய நாயனும் கிடையாது. அவன் என்றும் ஜீவித்திருப்பவன். என்றும் நிலைத்திருப்பவன். அவன் பக்கம் தவ்பாச் செய்து மீளுகிறேன். (அபூதாவூது, திர்மிதி)

34. கண் திருஷ்டி நீங்க ஓதும் துஆ

اَعُوْذُ بِكَلِمَاتِ اللهِ التَّامَّةِ مِنْ كُلِّ شَيْطَانٍ
وَهَامَّةٍ وَمِنْ كُلِّ عَيْنٍ لَامَّةٍ

அவூது பி கலிமாதில்லாஹித் தாம்மத்தி மின் குல்லி ஷைத்தானின் வஹாம்மதின் வமின் குல்லி அய்னின் லாம்மத்தின்.

பொருள்: எல்லா ஷைத்தான்களை விட்டும், தீமைகளை நாடக்கூடியவைகளை விட்டும், பழிக்கக்கூடிய எல்லாக் கண்களை விட்டும் அல்லாஹு தஆலாவின் பரிபூரணமான சொற்களைக் கொண்டு நான் பாதுகாவல் தேடுகிறேன். (புகாரி)

35. படைப்புகள் அனைத்தின் தீங்குகளை விட்டும் பாதுகாப்புத் தேடும் துஆக்கள்

اَعُوْذُ بِكَلِمَاتِ اللهِ التَّامَّةِ كُلِّهَا مِنْ شَرِّ مَا خَلَقَ

அவூது பி கலிமாதில்லாஹித் தாம்மத்தி குல்லிஹா மின் ஷர்ரி மா கலக

பொருள்: அல்லாஹு தஆலாவின் பரிபூரணமான அனைத்துத் திருமொழிகளின் பொருட்டைக் கொண்டு, அவன் படைத்த படைப்புகளின் தீங்கை

விட்டும் நான் அவனிடம் பாதுகாவல் தேடுகிறேன்.

(முஸ்லிம்)

بِسْمِ اللهِ الَّذِىْ لَا يَضُرُّ مَعَ اسْمِهٖ شَىْءٌ فِى الْاَرْضِ وَلَا فِى السَّمَاءِ

பிஸ்மில்லாஹில்லதீ லா யளுர்ரு மஅஸ்மிஹி ஷைவுன் ஃபில் அர்ளி வலா ஃபிஸ்ஸமாஇ.

பொருள்: எவனுடைய திருப்பெயருடன் வானம், பூமியிலுள்ள எப்பொருளும் இடையூறு அளிக்காதோ அந்த அல்லாஹ்வின் திருப்பெயரால் (பாதுகாப்புத் தேடுகிறேன்.) (அபூதாவூது, திர்மதி)

36. வீட்டிலும், ரிஜ்கிலும் விஸ்தீரணத்தைக் கேட்கும் துஆ

اَللّٰهُمَّ اغْفِرْلِىْ ذَنْبِىْ وَوَسِّعْ لِىْ فِىْ دَارِىْ وَبَارِكْ لِىْ فِىْ رِزْقِىْ

அல்லாஹும்ம மஃபிர் லீ தன்பீ வவஸ்ஸிஃ லீ ஃபீ தாரீ வபாரிக் லீ ஃபீ ரிஜ்கீ

பொருள்: யா அல்லாஹ்! என் பிழையைப் பொறுப்பாயாக! என் வீட்டை விஸ்தீரணமாக்கி வைப்பாயாக! என் ரிஜ்கில் எனக்கு பரக்கத் (அபிவிருத்தியை) நல்குவாயாக!

(அஹ்மது, ஸஹீஹுல் ஜாமிவு)

37. மனைவி மற்றும் பிள்ளைகளுக்காகச் செய்யும் துஆ

رَبَّنَا هَبْ لَنَا مِنْ اَزْوَاجِنَا وَذُرِّيّٰتِنَا قُرَّةَ اَعْيُنٍ
وَاجْعَلْنَا لِلْمُتَّقِيْنَ اِمَامًا

பொருளடக்கம்

ரப்பனா ஹப்லனா மின் அஜ்வாஜினா வதுர்ரிய்யாதினா குர்ரத்த அஃயுனின் வஜ்அல்னா லில் முத்தகீன இமாமா.

பொருள்: எங்கள் இரட்சகனே! எங்கள் மனைவிமார்களிலும், எங்கள் சந்ததிகளிலும் எங்களுக்கு கண் குளிர்ச்சியை அன்பளிப்பாக்கித் தருவாயாக! எங்களை பயபக்தியாளர்களுக்கு முன்னோடியாக ஆக்கித் தருவாயாக!

(அல்குர்ஆன்:25-71)

38. ஈருலக வாழ்வில் நன்மையைக் கேட்கும் துஆ. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அதிகமாக ஓதி வந்த துஆ

اَللّٰهُمَّ اٰتِنَا فِى الدُّنْيَا حَسَنَةً وَّفِى الْاٰخِرَةِ حَسَنَةً وَّقِنَا عَذَابَ النَّارِ

அல்லாஹும்ம ஆதினா ஃபித்துன்யா ஹஸனதன் வஃபில் ஆகிரதி ஹஸனதன் வகினா அதாபன் னார்.

பொருள்: யா அல்லாஹ்! எங்களுக்கு உலகிலும் அழகிய வாழ்வை அருள்வாயாக! மறுமையிலும் அழகிய வாழ்வை அருள்வாயாக! நரக வேதனையை விட்டும் எங்களைப் பாதுகாப்பாயாக!

குறிப்பு: அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஓதிய துஆக்களிலேயே அனைத்திலும் இதுவே அவர்கள் அதிகமாக ஓதும் துஆவாக இருந்தது.

(புகாரி, முஸ்லிம்)

பொருளடக்கம்

39. சுவனத்தைக் கேட்டு நரகின் விடுதலையை வேண்டும் துஆ

اَللّٰهُمَّ اِنِّىْٓ اَسْئَلُكَ الْجَنَّةَ وَاَسْتَجِيْرُكَ مِنَ النَّارِ

அல்லாஹும்ம இன்னீ அஸ் அலுகல் ஜன்னத வ அஸ்தஜீருக மினன் நார்.

பொருள்: யா அல்லாஹ்! நிச்சயமாக நான் உன்னிடத்தில் சுவர்க்கத்தைக் கேட்கிறேன். மேலும் உன்னிடம் நரகை விட்டு விடுதலையைக் கேட்கிறேன். (புகாரி, முஸ்லிம்)

40. தீய கனவுகள் கண்டால் ஓதும் துஆ

اَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ

அவூது பில்லாஹி மினஷ் ஷைத்தானிர் ரஜீம்

பொருள்: விரட்டப்பட்ட ஷைத்தானை விட்டும் அல்லாஹு தஆலாவிடம் நான் பாதுகாவல் தேடுகிறேன்.

எனக் கூறிவிட்டு, தாம் படுத்திருந்த பக்கம் மூன்று முறை துப்பி விட்டு மறுபக்கம் திரும்பிப் படுக்கவும். மேலும் அக்கனவை எவரிடமும் கூறவேண்டியதில்லை. அதன் தீங்கை விட்டு அல்லாஹ் அவரைப் பாதுகாப்பான்.

41.இறையச்சத்தையும், செல்வநிலையையும் கேட்கும் துஆ

اَللّٰهُمَّ اِنِّىْٓ اَسْئَلُكَ الْهُدٰى وَالتُّقٰى وَالْعَفَافَ وَالْغِنٰى

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுகல் ஹுதா வத்துகா வல்அஃபாஃப வல்கினா

பொருள்: யா அல்லாஹ்! நான் உன்னிடத்தில் நேர்வழியையும், உன் அச்சத்தையும், பேணுதலையும், பிறரிடம் தேவையற்று இருக்கும் செல்வநிலையையும் கேட்கிறேன். (முஸ்லிம்)

42. தீனில் உறுதியாக நிலைத்திருப்பதற்கு ஓதும் துஆ

يَا مُقَلِّبَ الْقُلُوْبِ ثَبِّتْ قَلْبِىْ عَلٰى دِيْنِكَ

யா முகல்லிபல் குலூபி ஸப்பித் கல்பீ அலா தீனிக

பொருள்: உள்ளங்களைப் புரட்டுபவனே! என் உள்ளத்தை உன் தீனின் (மார்க்கத்தின்) மீது உறுதிப்படுத்துவாயாக! (திர்மிதி)

குறிப்பு: இந்த துஆவை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தங்கள் இல்லத்தில் தங்கி இருக்கும் பொழுது அதிகமாக ஓதினார்கள்.

(திர்மிதி)

மேலும் மஃரிபுக்குப் பின் ஸுன்னத் இரண்டு ரக்அத்துகளை தங்கள் இல்லத்தில் தொழுத பின்பும் இந்த துஆவை ஓதுவார்கள். (அஹ்மது, திர்மிதி)

43.அருட்கொடைகள், ஆரோக்கியம் நீங்கிப் போகாமல் பாதுகாக்கப்பட ஓதும் துஆ

اَللّٰهُمَّ اِنِّىْ اَعُوْذُبِكَ مِنْ زَوَالِ نِعْمَتِكَ وَتَحَوُّلِ عَافِيَتِكَ وَفُجَائَةِ نِقْمَتِكَ وَجَمِيْعِ سَخَطِكَ

பொருளடக்கம்

அல்லாஹும்ம இன்னீ அவூது பிக மின் ஜவாலி நிஃமதிக வதஹவ்வுலி ஆஃபியதிக வஃபுஜாஅதி நிக்மதிக வஜமீஇ ஸக்திக

பொருள்: யா அல்லாஹ்! உன் அருட்கொடைகள் நீங்கிப் போவதை விட்டும், நீ வழங்கிய ஆரோக்கியம் (என்னைவிட்டு) திரும்புவதை (நீங்குவதை) விட்டும், உன் திடீர் வேதனையை விட்டும் உன் அனைத்துக் கோபங்களை விட்டும் நிச்சயமாக நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

(முஸ்லிம்)

44. தீய குணங்களை விட்டுப் பாதுகாப்புத் தேடும் துஆ

اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُبِكَ مِنْ مُنْكَرَاتِ الْاَخْلَاقِ وَالْاَعْمَالِ وَالْاَهْوَاءِ

அல்லாஹும்ம இன்னீ அவூது பிக மின் முன்கராதில் அக்லாகி வல்அஃமாலி வல் அஹ்வாஇ

பொருள்: யா அல்லாஹ்! தீய குணங்களை விட்டும், தீய செயல்களை விட்டும், மனோ இச்சைகளை விட்டும் நிச்சயமாக நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். (திர்மிதி)

45. கொடிய நோய்களை விட்டுப் பாதுகாப்புத் தேடும் துஆ

اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُبِكَ مِنَ الْبَرَصِ وَالْجُنُوْنِ وَالْجُذَامِ

பொருளடக்கம்

وَسَيِّئِ الْاَسْقَامِ

அல்லாஹும்ம இன்னீ அவூது பிக மினல் பரஸி வல்ஜுனூனி வல்ஜுதாமி வஸய்யிஇல் அஸ்காமி

பொருள்: யா அல்லாஹ்! வெண்குஷ்டத்தை விட்டும், பைத்தியத்தை விட்டும், கருங்குஷ்டத்தை விட்டும், மோசமான (கொடிய) நோய்களை விட்டும், நிச்சயமாக நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்.

(அபூதாவூது)

46.மனதின் தீங்கை விட்டும் பாதுகாப்புத் தேடும் துஆ

اَللّٰهُمَّ اَلْهِمْنِىْ رُشْدِىْ وَاَعِذْنِىْ مِنْ شَرِّ نَفْسِىْ

அல்லாஹும்ம அல்ஹிம்னீ ருஷ்தீ வஅஇத்னீ மின் ஷர்ரி நஃப்ஸீ

பொருள்: யா அல்லாஹ்! நேர்வழியை என் உள்ளத்தில் போடுவாயாக! என் மனதின் தீங்கை விட்டும் என்னைப் பாதுகாப்பாயாக! (திர்மிதி)

47. வயது அதிகமாகும் பொழுது அதிகமாக ஓதும் தஸ்பீஹ்

سُبْحَانَكَ اللّٰهُمَّ وَبِحَمْدِكَ اَسْتَغْفِرُكَ وَاَتُوْبُ اِلَيْكَ

ஸுப்ஹானகல்லாஹும்ம வபிஹம்திக அஸ்தஃபிருக வஅதூபு இலைக

பொருள்: யா அல்லாஹ்! உன்னைப் புகழ்ந்து

பொருளடக்கம்

தஸ்பீஹ் செய்கிறேன். உன்னிடம் பிழைப் பொறுப்பு இறைஞ்சுகிறேன். உன் பக்கம் தவ்பாச் செய்து மீளுகிறேன். (முஸ்லிம்)

குறிப்பு: அண்ணல் நபி (ஸல்) அவர்கள், தங்கள் மரணத்திற்கு சில மாதங்களுக்கு முன்னால் இருந்து இந்த திக்ரை அதிகமாக ஓதிவந்தார்கள்.

48. மீஜான் தராசில் நன்மையை அதிகப்படுத்தும் திக்ரு

سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهٖ عَدَدَ خَلْقِهٖ وَرِضٰى نَفْسِهٖ وَزِنَةَ عَرْشِهٖ وَمِدَادَ كَلِمَاتِهٖ

ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி அதத கல்கிஹி வரிளா நஃப்ஸிஹி வஜினத அர்ஷிஹி வமிதாத கலிமாதிஹி.

பொருள்: அல்லாஹ்வுடைய படைப்புகளின் எண்ணிக்கை அளவிற்கும், அவனுடைய திருப்தியின் அளவிற்கும், அவனுடைய அர்ஷின் எடை அளவிற்கும், அவனுடைய சொற்களின் மை அளவிற்கும் அல்லாஹ்வைப் புகழ்ந்து அவன் தூய்மையானவன் எனப் போற்றுகிறேன்.

(முஸ்லிம்)

குறிப்பு: இந்த திக்ரை காலை, மாலை மூன்று தடவை ஓதவும்.

பொருளடக்கம்

49. தம் மரணம் நெருங்கிவிட்டதாக உணர்பவர் ஓத வேண்டிய துஆக்கள்

اَللّٰهُمَّ اَعِنِّيْ عَلٰى غَمَرَاتِ الْمَوْتِ اَوْ سَكَرَاتِ الْمَوْتِ

அல்லாஹும்ம அஇன்னீ அலா கெமராதில் மவ்தி அவ் ஸகராதில் மவ்தி

பொருள்: யா அல்லாஹ்! மரணவேதனைகளின் பொழுதும், மரணத்தின் "ஸகராத்" என்னும் மயக்கங்களின் பொழுதும் நீ எனக்கு உதவிச் செய்வாயாக! (திர்மிதி)

குறிப்பு: அண்ணல் நபி (ஸல்) அவர்கள், தங்கள் மரணம் நெருங்கிய வேளையில் தங்களின் இரு கரங்களை தண்ணீரில் நனைத்து, தங்கள் முகத்தில் தடவிக் கொண்டார்கள். அப்பொழுது,

لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ اِنَّ لِلْمَوْتِ لَسَكَرَاتٍ

லா இலாஹ இல்லல்லாஹு இன்ன லில்மவ்தி லசகராத்

பொருள்: வணக்கத்திற்குரிய நாயன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. நிச்சயமாக மரணத்திற்கு மயக்கமான பல நிலைகள் உள்ளன என்று கூறினார்கள். (புகாரி)

50. வறுமை, இழிவு, அநீதி இழைத்தல் ஆகியவற்றை விட்டு பாதுகாப்புத் தேடுதல்

اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُبِكَ مِنَ الْفَقْرِ وَالْقِلَّةِ وَالذِّلَّةِ

பொருளடக்கம்

وَاَعُوْذُبِكَ مِنْ اَنْ اَظْلِمَ اَوْ اُظْلَمَ

அல்லாஹும்ம இன்னீ அவூதுபிக மினல் ஃபக்ரி வல்கில்லதி வத்தில்லதி வஅவூது பிக மின் அன் அள்லிம அவ் உள்லம.

பொருள்: யா அல்லாஹ்! வறுமை, குறைவு, இழிவு ஆகியவற்றை விட்டு நிச்சயமாக நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன். மேலும் நான் பிறருக்கு அநீதி இழைப்பதை விட்டும் அல்லது பிறர் எனக்கு அநீதி இழைப்பதை விட்டும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன். (அபூதாவூது, நஸயீ)

51. கோபம் அதிகமானால் ஓத வேண்டிய துஆ

اَعُوْذُبِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ

அவூது பில்லாஹி மினஷ் ஷைத்தானிர் ரஜீம்

பொருள்: எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டும் அல்லாஹ்விடம் நான் பாதுகாவல் தேடுகிறேன்.

(புகாரி, முஸ்லிம்)

